23.03.2026



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.125/2016**

**பி.வா.சா. 1–சிவராஜ், த/பெ.சிதம்பரம்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் சர்வே எண்ணை குறிப்பிட்டு வினவினால் பதில் அளிக்க தயாராக உள்ளேன். எங்களுக்கு ஏற்பட்ட பாக பத்திரம் மற்றும் தானசெட்டில்மெண்ட் அடிப்படையில் தான் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டதா என்றால் ஆமாம். சர்வே எண்.282, 283, ஆகிய எண்களில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் சர்வே எண்ணை சொல்ல முடியுமா என்றால் புலப்பட நகலை பார்த்து தான் கூறமுடியும். சர்வே எண்.282/1A என்னுடைய சொத்து. தெற்கில் உள்ள 283/1B ஆகிய சொத்துக்களில் அருணாச்சல ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டதாகும். சர்வே எண்.282/1C எங்களுடையது. மற்றும் 282/1D அருணாச்சல ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டது. இந்த இரு சர்வே எண்களும் நாத்தாங்கால் நிலமாகும். சர்வே எண்.282/4 உள்ள கிணறு எங்களுக்கும் அருணாச்சல ரெட்டியாருக்கும் கூட்டு

23.03.2026



கிணறு ஆகும். சர்வே எண்.282/2, 282/5 இரு சொத்துக்களும் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். சர்வே எண்.282/3 அருணாச்சல ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டதாகும். சர்வே எண்.282/5 நிலத்திற்கு செல்ல சிக்கத்தம்பூர் பாதை என தெற்கிலிருந்து வடக்காக செல்லும் பாதை உரிமை உண்டு என்பது தான் எனது கட்சி என்றால் சரிதான். வாதி சுப்பிரமணியின் கட்சி இந்த தெற்கிலிருந்து வடக்காக செல்லும் பாதை எங்களுக்கு உரிமை இல்லை என்பது தான் கட்சி என்றால் சரிதான்.சர்வே எண்.282/6 A, 282/6B, 282/6C ஆகிய நிலங்களின் வழியாக தான் தெற்கிலிருந்து வடக்காக செல்லும் பாதை உள்ளது என்பது எனது கட்சி. சர்வே எண்.282/5 செல்வதற்காக 282/6A, 282/6B, 282/6C ஆகிய நிலங்களின் வழியாக செல்லும் பாதையில் எங்களுக்கு பாதை உரிமை உண்டு என எதிர்பாத்திய வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்கள் 282/6A, 282/6B, 282/6C யில் பாதையின் அடி நிலம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் முன்பு பொன்னம்மாள் நிலம் தற்போது சுப்பிரமணியனுக்கு பாத்தியப்பட்டது. சுப்பிரமணியன் நிலத்தில் உள்ள பாதையில் எங்களுக்கு புலக்க உரிமை உண்டு என்பது எனது கட்சி. சர்வே எண்கள் 282/6A, 282/6B, 282/6C ஆகிய நிலங்கள் பொன்னம்மாளிடம் இருக்கும்போது சர்வே எண்.282/5 நிலமும்

23.03.2026



பொன்னம்மாளுக்கு பாத்தியப்பட்டது. என தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சாட்சி அமைதியாக நிற்கிறார். பொன்னம்மாளின் கணவர் பெயர் எனக்கு தெரியாது. சர்வே எண். 282/6A, 282/6B, 282/6C என்ற நிலங்களுக்கு பாத்தியப்பட்ட பொன்னம்மாள் என்பவர் வேறு நான் குறிப்பிட்ட பொன்னம்மாள் என்பவர் வேறு என்று சொன்னால் சரியல்ல.சர்வே எண்.282/5 நிலத்திற்கு உரிய நான் சொல்லும் பொன்னம்மாள் என்பவரின் கணவர் பெயர் செல்லமுத்துப்பிள்ளை என்று சொன்னால் சரிதான். சர்வே எண். 282/6A, 282/6B, 282/6C நிலத்திற்கு சம்பந்தப்பட்ட பொன்னம்மாளின் கணவர் பெயர் துரைசாமி என்ற ராமசாமிபிள்ளை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.